RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

OPEN ACCESS

DOI: 10.34256/irjt224s173

# உமணர்குடியும் உப்பும்

**சு. கோமதி அழகு** [அ, *]

[அ] தமிழியல் துறை, ஸ்ரீ காளீஸ்வரி கல்லூரி (தன்னாட்சி), சிவகாசி-626130, தமிழ்நாடு, இந்தியா

# Umanarkudi and Salt

**S. Gomathi Azhagu** [a, *]

[a] Department of Tamil Studies, Sri Kaliswari College, (Autonomous), Sivakasi-626130, Tamil Nadu, India

* Corresponding Author: prithiga85@gmail.com

Received: 05-04-2022
Revised: 17-10-2022
Accepted: 05-11-2022
Published: 17-12-2022

Check for updates

**ABSTRACT**

This article is intended to understand the life and trade practices of the salt merchants, who are the Umanarkudi ethnic group. It is known that the Umanas traded without any economic purpose. The information on the trade of Umanarkudi became the subject of study in order to look at its earlier background on the grounds that salt still occupies a significantly larger place in the market economy today. The study of salt in the life of the ancient Tamils, the price of salt, the close relationship between the Umanars and the oxen, and the diet of the Umanars reveals the status of the Umanars and the value of salt.

**Keywords:** Umanarkudi, Ethnic Group, Economy, Salt.

## முன்னுரை

நிலத்தை அடிப்படையாகக் கொண்ட வேளாண் சமூகவரிசையில் பெருமணல் உலகமாகப் பார்க்கப்பட்ட நெய்தல்நில மக்களின் வாழ்வியலில் மட்டுமல்லாது குறிஞ்சி, முல்லை, மருதநில மக்களின் வாழ்விலும் தவிர்க்க இயலாத பொருள்களில் ஒன்று உப்பு. பொருளாதார அடிப்படையில் இன்றியமையாத வாணிபப் பொருளாயினும் அது மனித உணர்வுகளுடன் நெருங்கிய தொடர்புடையதாகவும் காணக்கிடைக்கிறது. உப்பின் தொன்மையினை நோக்குமிடத்து ஆதிமனிதன் நெருப்பினை அறிந்தது எத்தகைய அறிவியல் முன்னேற்றமோ அதே போன்று உப்பு உற்பத்தியினை அறிந்ததும் வேதியியல் அறிவின் வெளிப்பாடே எனலாம். மனித அறிவின் வேதியியல் கண்டடைவான உப்பு இனக்குழுச் சமூக வாழ்வில் உமணர்குடியினரோடு இரண்டறக் கலந்த வாணிபப் பொருளாகும். அத்தகைய உப்பு வாணிகம் இனக்குழு மக்களின் வாழ்விலும் பொருளாதாரத்திலும் ஏற்படுத்திய மாற்றங்களை ஆய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

## இனக்குழு வாழ்வும் சங்க காலமும்

இனக்குழுக்கள் நிலங்களையும் தொழிலையும் அடிப்படையாகக் கொண்டு வேறுபட்டிருந்தன. காடுகளில் வேட்டையாடியும் தேன், கிழங்கு போன்ற உணவுகளைச் சேகரித்தும் வாழ்ந்த இனக்குழுவினர் குறிஞ்சிநில மக்கள் என்றும் ஆடு, மாடு மேய்த்தலோடு வேளாண்மைத் தொழிலில் ஈடுபட்ட இனக்குழுவினர் முல்லை நிலத்தவர் என்றும் உழுவோரும் உழுவித்து உண்போருமான உழவர்களை மருதநிலத்தவர் என்றும் மருதநிலத்தை ஒட்டிய நீண்ட கடல் எல்லை கொண்ட நிலமாகிய கடலும் மணற்பரப்புமாகிய நிலத்தில் மீன் பிடித்தும் உப்பு விளைவித்தும் வாழ்ந்த பரதவர்

இனத்தை நெய்தல் நிலத்தவர் எனவும் இலக்கியங்கள் அடையாளப்படுத்துகின்றன. இத்தகைய இனக்குழு மக்கள் தங்களுக்குள் பெரும்பான்மையும் உணவுப் பொருட்களையே பண்டமாற்று செய்து கொண்டனர். இப்பண்டமாற்று முறையில் இலாப நோக்கம் இன்றி பொருட்பரிமாற்றமே முதன்மைப் பெற்று விளங்கியது. இதுபோன்ற "இனக்குழு வாழ்க்கை முறையிலிருந்து நிலத்தை அடிப்படையாகக் கொண்ட வேளாண் சமூக வர்க்க ஆட்சி முறைக்கு மாறிய காலத்தை சங்ககாலம் எடுத்துக்காட்டுகிறது" ஆக தொழில் சார்ந்த இனமே இனக்குழு என்பதில் ஐயமில்லை எனலாம் (Perinban, 2014).

## பழந்தமிழர் வாழ்வில் உப்பு

உணவுப் பொருளில் என்றும் தவிர்க்க இயலாத பொருள் உப்பு. "உப்பு என்ற தமிழ்ச்சொல்லுக்கு 'சுவை' என்பதே முதற்பொருள்" என்பது அவர்களின் கூற்றாகும். "சமையலுக்குப்பயன்படுத்தப்படும் உப்பிற்கு 'வெள்ளுப்பு'என்று பெயர். பழந்தமிழ் நாட்டுப் பொருளாதாரத்திலும் தமிழ் பண்பாட்டிலும் உப்புக்குத் தனியிடம் உண்டு. பழந்தமிழர்களால் சுவையின் சின்னமாகவும் வளத்தின் சின்னமாகவும் உப்பு கருதப்பட்டது. தன் உருவம் தெரியாமல் பிற பொருள்களோடு கலந்து பயன்தருவது வெள்ளுப்பு" உப்பு உணவின்சுவையூட்டி மட்டுமல்லாது மனித வாழ்வின் ஓர்அங்கமாக விளங்கிவருவதைக் காணமுடிகிறது (Paramasivan, 2019). "உப்பு உற்பத்தியைப் பற்றி பல இடங்களிலும் குறிக்கப்பெறுவதால் உப்பளத் தொழில் முக்கியமான தொழிலாக இருந்திருக்க வேண்டும்" வாணிபத்தை உள்நாட்டு வாணிபம் வெளிநாட்டு வாணிபம் என இருவகைப்படுத்துவர் (Paramasivan, 2017). உள்நாட்டு வாணிபத்தில் ஊர் ஊராகச் சென்று விலை கூறி விற்ற பண்டங்களுள் முதன்மையான பொருள் உப்பு.

## பரதவர்களும் உமணர்களும்

நிலத்தில் விளையக்கூடிய விளைபொருட்களை வேளாண் பொருட்கள் என்பது மரபு. வேளாண் பொருட்கள் பருவமழையின் வரவு கண்டு பயிர் செய்யப்படுகிறது என்பது நாம் அறிந்ததே ஆயினும் மழையை விரும்பாத வேளாண்மையாக நிலத்தில் விளையக் கூடிய விளைபொருள் உப்பு என்பதை,

"நேர்கண் சிறுதடி நீரின் மாற்றி

வானம் வேண்டா உழவினெம்

கானலஞ் சிறுகுடி ..........."

என்ற நற்றிணைப் பாடல்வழி அறியமுடிகிறது (Balasubramanian, 2007). உப்புப் பாத்தியிலே கடலின் நீரைக் கொணர்ந்துபாய்ச்சி விளைவித்துக் கொள்வதன்றி மழையை விரும்பாத வேளாண்மையைச் செய்யக்கூடிய பரதவர்குடியானது சிறுகுடி என்றழைக்கப்பட்டுள்ளது. உழாது விளைவிக்கும் நெய்தல்நில மக்களாகிய பரதவர் உவர் நிலத்தில் விளைந்த உப்பினைச் செறிவுடைய உப்பு வாணிகர் வருகின்ற காலம் நோக்கி கழிக்கரைச் சோலையருகே குவடாகக் குவித்த காவலையுடைய குவியலாகிய உப்புக் குவட்டில் பரதவமகளிர் ஏறி நின்றனர் என்ற செய்தியை

"உவர்விளை உப்பின் உழாஅ உழவர்

ஓகை உமணர் வருபத நோக்கிக்

குன லிட்ட காவற் குப்பைப்

புலவுமீன் உணங்கப் படுபுள் ஓப்பி

மடநோக்கு ஆயமொடு உடனுப்பு ஏறி"

எனும் நற்றிணைப் பாடல் வழி அறியமுடிகிறது (Balasubramanian, 2007). மேலும் உப்பு விளைத்தவர்கள் பரதவர்கள் எனக்கூறுவதோடல்லாமல் உப்பு வாணிகரால் கொண்டுவரப்பட்ட உப்பு விலையினால் கிடைத்த நெல்லைக் குற்றி ஆக்கிய அரிசக் காணத்தை உன் குதிரைக்குக் கொடுப்போம் எனத் தோழி கூறுவதிலிருந்து உப்பை நெல்லுக்கு விலையாக உமணர்கள் விற்று வந்தனர்

என்பதையும் பரதவரிடமிருந்து உப்பு உமணர்களால் கொள்முதல் செய்யப்பட்டது என்பதையும் அறியமுடிகிறது. இதனை

"உமணர் தந்த உப்புநொடை நெல்லின்

ஆயினி மாஇன்று அருந்த" என்ற நற்றிணைப் பாடல் உணர்த்துகிறது (Balasubramanian, 2007).

## உப்பும் விலையும்

உப்பிற்கு விலை வைத்து விற்கும் வாணிகக்குடிகளாக உமணர்கள் திகழ்ந்துள்ளனர். "பரதவர்கள் விளைவித்த உப்பை உமணர்குடியினர் தம் வண்டிகளில் ஏற்றி குடும்பம் குடும்பங்களாக ஊர் ஊராகச் சென்று கூடாரம் அடித்துத் தங்கி நெல்லுக்கு விலையாக விற்றார்கள். அன்று நெல்லுக்கும் உப்புக்கும் ஒரேவிதமான செலாவணி மதிப்பு இருந்தமை தெரிகிறது. "நெல்லும் உப்பும் நேரீர்...." எனக்கூவி விற்றதிலிருந்து இது தெரிகிறது" (ராஜ் கௌதமன்,2018)5

"............ உமணர்

வெண்கல் உப்பின் கொள்ளை சாற்றிக்

கணநிரை கிளர்க்கும் நெடுநெறிச் சகடம்"

என்ற நற்றிணைப் பாடலும் உமணர்கள் வெண்கல்லாகிய உப்பிற்கு விலைகூறி விற்றமையைக் கூறுகிறது (Balasubramanian, 2007). மேலும்

"நெல்லின் நேரே வெண்கல் உப்பெனச்

சேரி விலைமாறு கூறலின் ...."

என்ற அகநானூற்றுப் பாடலும் உப்பிற்கு விலையாகக் கூறும் உமணரின் குரல் கேட்டு நாய் குரைத்ததாகக் கூறுகிறது (Annamalai, 2004).

"............... உழாது செய்த

வெண்கல் உப்பின் கொள்ளை சாற்றி"

"உவர்விளை உப்பின் கொள்ளை சாற்றி

அதர்படு பூழிய வேட்புலம் படரும்

ததர்கோல் உமணர் போகும் நெடுநெறிக்

கணநிரை........."

என்ற அகநானூற்றுப் பாடலடிகள் உமணர் உப்பினைக் கூவி விலைகூறி உப்பிற்கு விலையாக நெல்லையே பண்டமாற்று செய்துள்ளனர் (Annamalai, 2004).

## உமணரும் எருதும்

பரதவரிடத்துப் பெற்ற உப்பை உமணர்கள் எருதுகள் பூட்டிய வண்டிகளில் வைத்து ஊர் ஊராகச் சென்று விலைகூறி பண்டமாற்று செய்துள்ளனர். உமணர் குடும்பத்தவருள் ஒருவராகவே எருதுகள் பராமரிக்கப்பட்டுள்ளன. உப்பு வாணிபத்தில் எருதின் பங்கு அளவிடற்கரிதாகவே உள்ளது. உமணர் சில்பத உணவாகிய உப்பின் விலைகூறி பல எருதுகளையும் ஓட்டிக்கொண்டு நெடி வழிகளில் ஊர்தொறும் செல்வர் என்கிறது பெரும்பாணாற்றுப்படை (64-65). எருதோ வண்டியோ பழுதடைந்தால் மாற்றாகப் பயன்படுத்துவதற்காக உமணர்கள் பல்வேறு எருதுகளையும் வண்டிகளையும் வரிசையாக நடத்திச் சென்றுள்ளனர். எருது பழுதுபட்டால் அதற்கு உமணர்கள் நீரும் புல்லும் கொடுக்காமல் யாருமில்லாத ஓர் இடத்தில் விட்டுச் செல்வர்.இதனை,

“நீரும் புல்லும் ஈயாது உமணர்

யாருமில் ஒருசிறை முடத்தொடு துறந்த

வாழா வான்பகடு ........”

என்ற புறநானூற்று அடியால் அறியலாம் (Avvai Duraisamy pillai, 2010). எருதுகளின் கழுத்தில் கட்டப்பெற்ற மணியின் ஓசையானது காய்ந்த மரத்தில் உள்ள சிள்வீடு எனும் வண்டுகளின் ஓசையை ஒத்திருந்தது என்பதை

“வறன்மரம் பொருந்திய சிள்வீடு உமணர்

கணநிரை மணியின் ஆர்க்கும்”

என்ற அகநானூற்றுப் பாடலடி வழியும் உமணர்களால் வளைந்த நுகத்தடியில் கட்டப்பெற்ற பகடுகளாகிய எருதுகள் வருந்தி வண்டியிழுக்கும் என்பதை (Annamalai, 2004)

“.............. உமணர்

கொடுநுகம் பிணித்த செங்கயிற் தொழுகைப்

பகடு யாக் கொள்ளும் ..........”

என்ற அகநானூற்றுப் பாடலடி வழியும் அறியமுடிகிறது (Annamalai, 2004). எடை அதிகமுள்ள உப்பினை இழுத்துச் செல்லும் உமணர்களையும் எருதுகளையும் போல பரதவர்கள் கடலில் குறுங்கண் வலையால் முகந்த மீன்கள் கொண்ட கலத்தினைக் கரையை நோக்கி இழுத்துச் சென்றனர் என்கிறது அகநானூறு நெய்தல் திணைப்பாடல் (பா.எண்.30) உமணர்கள் எருதினைப் போலவே உடல் வலிமை கொண்டவர்களாக இருந்துள்ளனர். மணற்பாங்கான இடங்களில் எருதுகள் வருந்தி வண்டியினை இழுக்கும் பொழுது உமணர்களும் பின் நின்று தள்ளி வண்டியைச் செலுத்தியுள்ளனர்.

## நிலையற்ற குடியிருப்புகள்

உமணர்கள் ஊர் ஊராகச் சென்று உப்பு விற்கும் தொழிலைச் செய்ததால் அவர்களுக்கென்று நிலைத்த குடியிருப்புகள் இருந்ததாகத் தெரியவில்லை. எருதுகள் பூட்டப்பெற்ற உப்பு வண்டியிலேயே உணவு தயாரிக்கத் தேவையான பண்டங்களையும் ஏற்றிச் சென்றுள்ளனர். மேலும் உமட்டியர்கள் தங்கள் பிள்ளைகளோடு அவர்களால் வளர்க்கப்படும் குரங்குகளையும் வண்டியில் அழைத்துச் சென்றதனை சிறுபாணாற்றுப்படைக் கூறுகிறது. உமணர் வண்டியுடன் வந்த அடைகாக்கும் பேடை (கோழி) அஞ்சி ஓடுவது போல அலை ஒலித்து எழுந்து சிதறி விழும் கடலை எல்லையாக உடையது தலைவியின் நல்லூர் என்ற செய்தியினை

“உப்பொய் உமணர் ஒழுகையொடு வந்த

இளைப்படு பேடை யிரியக் குரைத்துஎழுந்து

உருமிசைப் புணரி யுடைதரும்

பேருநீர் வேலியெஞ் சிறுநல்லூரே”

எனும் அகநானூறு பாடல் வழி காணமுடிகிறது (Annamalai, 2004). “மாட்டு வண்டிகளில் நெடுநாட்களுக்கு வேண்டியவற்றை (மர உரல்கள், ஊறுகாய்ச் சாடிகள்) ஏற்றிக் கொண்டு உமணர் குடியைச் சேர்ந்த குடும்பங்கள் காட்டுப் பாதைகளில் உப்பு மூட்டைகளை ஏற்றிச் சென்றனர். பெண்களும் குழந்தைகளும் வண்டியில் அமர்ந்திருக்க ஆண்கள் வண்டிமாடுகள் திருகாமல் அச்சு முறியாமல் பார்த்தவாறு பாதுகாப்பாக கூடவே நடந்து சென்றார்கள். ஆங்காங்கே பாசறையடித்துத் தங்கி உப்பினை விற்று நெல்லை வாங்கி வந்தார்கள்” என்ற கூற்றிலிருந்தும் உமணர்கள் ஓர் இடத்தில் நிலையாகத் தங்கி வாழும் நிலையில் இல்லை என அறியமுடிகிறது (Raj Gowthaman, 2016). அதனாலேயே

தமது பிள்ளைகளை ஒத்த அன்பு வளர்ப்புகளாகிய குரங்குகள் மற்றும் பேடைகளை (கோழி) தங்களுடனேயே அழைத்துச் சென்றுள்ளனர்.

## உமணர்களின் உணவு

செல்லும் வழியில் கிடைக்கக் கூடிய உணவுகளை அவ்விடத்திலேயே தங்கி சமைத்துள்ளனர், உண்டுள்ளனர். புலியால் கொன்று தின்னப்பெற்ற யானையினது எஞ்சிய ஊனில் ஆறலைப்போறாகிய எயினர்கள் தம் கோலில் கோர்த்து எடுத்துச் சென்றது போக எஞ்சிய ஊனினை உமணர்கள் தீக்கடைக்கோலாகிய சிறுதீயில் வதக்கி சுனையில் கிடைத்த இனிய நீராலாகிய சோற்றின் உலையில் கூட்டி ஆக்கி உணவு சமைத்து உண்டனர் எனும் இச்செய்தியினை

"புலிதொலைத் துண்ட பெருங்களிற்று ஒழிஊன்

கலிகெழு மறவர் காழ்க்கோத்து ஒழிந்ததை

ஞெலிகோல் சிறுதீ மாட்டி ஒலிதிரைக்

கடல்விளை அமிழ்தின் கணஞ்சால் உமணர்

சுனை கொள் தீநீர்ச் சோற்றுலைக் கூட்டும்"

என்ற அகநானூறு பாடலில் காணமுடிகிறது (Annamalai, 2004). மேலும் இப்படலில் உப்பு 'கடல்விளை அமிழ்து' எனக் கூறப்பட்டதிலிருந்து உப்பின் மேன்மையினையும் நாம் அறிய முடிகிறது. அகநானூறு பாடலும்

"களிறு சுவைத்திட்ட கோதுடைத்து அதரல்

கல்லா உமணர்க்குத் தீமூட்டாகும்"

என உமணர்கள் உணவு சமைக்க களிறுகளால் சுவைத்துப் போடப்பட்ட யாமரச் சக்கையினைப் பயன்படுத்தியதைக் கூறுகிறது (Annamalai, 2004).

## உமணர் பொருளாதாரமும் உப்பு வாணிகமும்

மருதநிலத்து நெல்லுக்கு நிகராக உப்பு விலை கூறப்பட்டதிலிருந்து உணவுப் பொருட்களில் உப்பு உயரிய இடத்தைப் பெற்றுள்ளமையைக் காணலாம். இருப்பினும் முதன்மையான உணவுப் பொருட்களின் வரிசையில் உப்பு இடம்பெறப் பல்வேறு காரணங்கள் உள. நெய்தல் நிலத்தில் மட்டுமே விளைவிக்கக் கூடிய உப்பு ஏனைய அனைத்து நிலமக்களுக்கும் தேவையானது என்பதாலும் நெல்லைப் போல பிற நிலத்தவர் எவரும் விளைவிக்க முடியாது என்பதாலும் போக்குவரத்து வசதிகள் குறைந்த காலமாதலால் தேடிவந்து விற்கும் உப்பிற்கு மதிப்பு அதிகமாயிற்று எனலாம். மழைக் காலங்களில் உப்பின் உற்பத்திக் குறைவு என்பதும் ஒரு காரணமாகலாம்.

நிலையான குடியிருப்பின்றி ஊர்தோறும் சென்று விற்கும் உப்பு வாணிகத்தில் உமணர்கள் தமக்கான செல்வத்தினைச் சேர்க்கும் நோக்கமின்றி அதனை மக்களுக்கான சேவை போல் கருதியுள்ளனர். "இன்றைய பொருளாதாரக் கணக்கில் உப்பின் விலை இப்போது உள்ளதைவிட ஐந்து மடங்கு அதிகமாக இருந்ததாகக் கொள்ளலாம்" என்கிறார் (Paramasivan, 2019). தொ.ப. அத்தகைய மதிப்பு மிக்க உப்பினை உமணர்கள் பரதவர்களிடமிருந்து பெற்று வாணிபம் செய்துள்ளனர். உமணர்களே உப்பினை விளைவித்ததாகக் குறிப்புகள் காணக்கிடைக்கவில்லை. அதனால் பரதவர்களிடம் பெற்ற உப்பிற்குப் பதிலாக நெல்லைக் கொடுப்பதாக முன்ஒப்பந்தம் செய்துகொண்டு உப்பைப் பெற்றிருக்கலாம். அதன்படி நெல்லினைக் கொடுத்திருக்கலாம். ஆனால் இதுபோன்ற நிகழ்வுகள் நடந்ததாகக் குறிப்புகள் இல்லையெனினும் அவ்வாறு நடந்திருக்க வாய்ப்பு உள்ளதனை நாம் ஊகித்துக் கொள்ள முடிகிறது. ஆக, கிடைத்துள்ள தரவுகளின் அடிப்படையில் உமணர்குடியின்வாழ்க்கையை நாம் முழுமையாக அறியஇயலவில்லை.உமணர்குடியைச்சேர்ந்தவர்கள் சங்ககாலத்திற்குப் பிறகு தற்காலத்திலும்

சிறுபான்மையாக உப்பு வாணிபம் செய்வதனை நாம் அரிதாகக் காண முடிகிறது. இருப்பினும் இன்றைய உமணர்களின் உப்புவிலையானது அவர்களின் வாழ்வில் பொருளாதார மேம்பாட்டைத் தருகிறதா என்பதும் ஐயமே.

சங்க கால உமணர்களைப் போலவே எருது பூட்டிய இரப்பரால் ஆன சகடக்கால்களை உடைய வண்டிகளில் உமணர்கள் உப்பு விலை கூறிவரும் காட்சிகளும் கிராமப்புறங்களில் அரிதாகக் காணக்கிடைக்கிறது.

## முடிவுரை

சங்க காலத்தில் உமணர்கள் உள்நாட்டு வாணிபத்தில் சிறந்து விளங்கியுள்ளனர். தமது வாணிபப் பொருளின் (உப்பின்) மதிப்பினை நன்கு உணர்ந்தவராக் காணப்படுகின்றனர். உமட்டியர் எருது பூட்டிய வண்டியைச் செலுத்த உமணர்கள் காவலாய் பின் செல்ல வண்டியில் உப்புமட்டுமல்லாது பிள்ளைகளும் வளர்ப்புப் பிராணிகளும் அழைத்துச்செல்லப்பட்டதிலிருந்து அவர்களின் மனிதாபிமானத்தைஉணரமுடிகிறது. உமட்டியர்கள் வண்டியினைச் செலுத்துவதோடு ஊர்த் தெருக்களில் உப்பினைக் கூவி விற்றனர் என்பதிலிருந்து உமண்சாத்தில் பெண்களின் பெரும்பங்கினை நாம் காணமுடிகிறது. உமணர்கள் இரண்டாயிரம் ஆண்டுகள் கடந்து இன்றும் தமது மரபுவழித் தொழிலாகிய உப்புவாணிபத்தை மேற்கொள்கிறார்கள் என்பது அவர்களுடைய வாணிக ஆளுமையையும் மரபு காக்கும் மாண்பினையும் நமக்கு உணர்த்துகின்றன. உமணர்கள் குறித்த வாழ்வியல் கூறுகளாகிய நம்பிக்கைகள், சடங்குமுறைகள் குறித்து நாம் முழுமையாக அறிய இயலவில்லை.

## References

Annamalai, Suba., (2004) Aganaanooru Moolamum Uraiyum, Koviloor madalayam, Koviloor, India.

Avvai Duraisamy Pillai, S. (2010) Purananooru Moolam Uraiyum, Poompuhar Pathippagam, Chennai, India.

Balasubramanian, K.V. (2007) Natrinai (Moolamum Uraiyum), New Century Book House, Chennai, India.

Paramasivan, T. (2019) Panpattu Asaivugal, Kalachuvadu Publication, Nagercoil, India.

Perinban, D. (2014) Tamilar Valartha Thathuvangal, Bharathi Puthagaalayam, Chennai, India.

Raj Gowthaman, (2006) Tamil Samoogathil Aramum aatralum, Tamizhini, Chennai, India.

**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Author has no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author 2022. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License